[18th February 1959

Sri A. VEDARATHNAM : ஐந்தாவது வகுப்பில் இருந்து மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயமாகப் போதிக்கப்படுவதன் மூலமாக அவர்களுடைய தாய் மொழியில் தரம் குறைந்து விடாதா? "கட்டாயம்" என்ற சொல்லை ஆட்சேபணை செய்கின்றவர்கள் இதைப்பற்றி ஆட்சேபணை கிளப்பலாமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது "லெஜிஸ்லேச்சர்" கமிட்டியிலே விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. இதிலே ஆங்கிலம் கட்டாயமாக இருப்பதற்கு யாரும் ஆட்சேபணை கிளப்பியதாகத் தெரியவில்லை.

Sri K. VINAYAKAM : Whereas due to a falling-off of standard of English, it has been decided to start teaching of this language from the 5th class onwards, will the Government consider the feasibility of abolishing the mother-tongue medium, i.e., the regional language medium and introduce only English in schools even for other subjects like Social Studies, Elementary Science, Maths, etc., in all High School stages?

The Hon. Sri C. SUBRAMANIAM : No. There is no such intention of abolishing regional language medium for the teaching of other subjects. It is because we do not have English medium, we are giving one extra hour so that students might have sounder knowledge of English.

Sri M. KALYANASUNDARAM : ஆங்கிலத்தை இப்பொழுது ஐந்தாவது வகுப்பில் இருந்து கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று கொண்டு வந்திருப்பதில் இருந்து இப்பொழுது போதனா மொழி ஆங்கிலமாக இருப்பது மாற்றப்படாது என்று அர்த்தமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : போதனாமொழியைத் தமிழாக மாற்றுகின்ற காலத்திலும் ஆங்கில அறிவு மாணவர்களுக்கு இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் ஐந்தாம் வகுப்பில் இருந்தே சொல்லிக் கொடுக்கப்படுகிறதே தவிர, என்றைக்கும் போதனா மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டுமென்று அர்த்தம் கிடையாது.

Sri A. A. RASHEED : Sir, is there any proposal to appoint extra secondary grade teachers' to handle English in Higher Elementary schools?

The Hon. Sri C. SUBRAMANIAM : That is the idea, that is, in every elementary school, there would be one secondary grade teacher so that to that extent the standard of elementary schools might improve in respect of other subjects also.

Textile Mills and Plantation workers

* 445 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Centre have sought the help of this Government to take a comprehensive wage census of the workers employed in textile mills, plantations, etc., in the State during 1958; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Officers of the Labour Department have instructions to extend necessary assistance and co-operation to the field investigators of the Central Labour Bureau in the collection of data from all establishments in this State.

18th February 1959]

SRI N. K. PALANISAMI : பஞ்சப்படி, சம்பளம் இரண்டையும் ஒன்றாக இணைத்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதைச் சர்க்கார் ஆதரிக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது கொள்கை பூர்வமானது. பட்ஜட் விவாதத்தின் போது பேசலாம் என்று நினைக்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : அகில இந்தியா ரீதியில் ஒரு "வேஜஸ் போர்டு" நெசவாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நியமிக்கப்பட்டு சென்னை ராஜ்யத்தில் விசாரணை செய்து வந்தார்களா? விசாரணை செய்திருந்தால் அது எப்பொழுது முடிவடைந்தது? எப்பொழுது பிரசுரமாகும்?

THE HON. SRI R. VENKATARAMAN : இது மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட போர்டு. மத்திய சர்க்காரிடம்தான் தகவல் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : இது மேற்கொண்டிருக்கும் இந்தப் பரிசீலனையின் நோக்கம் என்ன? எப்பொழுது முடிவு எடுக்கப்படும்? அந்த முடிவுகள் எடுக்கக் கூடிய சமயத்தில் ராஜ்யத்தின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுவும் மத்திய சர்க்காரைக் கேட்டால்தான் பதில் சொல்ல முடியும். அந்தந்த துறையில் இப்பொழுது இருக்கின்ற சம்பளம், பஞ்சபடி எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதைச் சேகரித்துக் கொடுப்பதற்கு இந்தச் சர்க்காரின் உதவியைக் கேட்டிருக்கிறார்கள். அதை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : முன்கூட்டியே கிராமத்திலுள்ள நெசவுத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் இவர்களுடைய வருமானத்தை அரசாங்கம் கணக்கெடுக்குமா? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது அவ்விதமான யோசனை இல்லை.

Damages caused by the brook Kattuvari

* 446 Q.—SRI S. SADASIVAM (on behalf of Sri K. R. VISWANATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Executive Engineer, South Arcot division has received any representation, dated 20th October 1958 from the villagers of Veeranandapuram and Kandamangalam, South Arcot district regarding the damages caused by the jungle brook by name 'Kattuvari'; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

Elumalai-Mangalarevu Road

*447 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, திருமங்கலம் தாலூகா எழுமலையிலிருந்து மங்கலரேவுக்குச் செல்லும் மண்ரோட்டை மெட்டல் (metal) செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is at present no proposal for metalling the road from Elumalai to Mangalarevu.